**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண். 514/2021</u>**

2025ம் ஆண்டு ஜூன் மாதம் 23–ம் நாள் திங்கள்கிழமை வா.சா.1

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | கிருஷ்ணமூர்த்தி | தொழில் |
| த/பெ | ராமசாமி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 26.08.2019 ஆம் தேதி தாவா சொத்தை கிரையம் செய்வதற்கான தொகையை கைவசம் வைத்திருந்தேன் என்பதை காட்ட ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். மேற்படி தேதியில் நான் செலுத்திய காசோலை விருப்பப்பட்டு விட்டது என்றால் சரிதான். மேற்படி காசோலை வங்கிக் கணக்கில் போதிய பணம் இல்லை என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி காசோலை திருப்பப்பட்ட தேதி அன்றோ அல்லது மறுநாளோ நான் வரைவோலை வழங்கவில்லை என்றால் சரிதான்.

2. வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதால் காசோலையை வசூலுக்கு போட வேண்டாம் என்று நான் பிரதிவாதியிடம் சொன்னேனா என்றால் இல்லை. எனக்கு தாராபுரம் நீதிமன்றங்களை தவிர வேறு நீதிமன்றங்களிலும் சிவில் வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். முன்பனத் தொகை செலுத்தி விட்டு பின்னிட்டு வழக்காடுவது என்னுடைய வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. ரூபாய் ஒரு கோடி கொடுத்த அன்றே

தாவா சத்துக்களை நான் அளந்து பார்த்துவிட்டு தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரையில் அவர்கள் அளந்து தரவில்லை. தாவா சொத்துக்களை நான் தனியார் அளவீட்டாளரை வைத்து அளந்து பார்த்த பிறகு தான் மேற்படி ஒரு கோடி ரூபாயை பிரதிவாதிகளுக்கு நான் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பூமிகள் வங்கியில் ஒப்படைப்பு அடமானம் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் சரியல்ல.

3. தாவா சொத்துக்கான வில்லங்கச் சான்றிதழை நான் பெற்றுப் பார்க்கவில்லை என்றால் சரிதான் சட்டக் கருத்துறை வாங்கித் தருவதாக பிரதிவாதிகள் சொன்னார்கள். வழக்கு தொடுக்கும் வரை நான் பிரதிவாதிகளுக்கு ஒரு கோடி ரூ 70 லட்ச ரூபாய் கொடுத்துள்ளேன். ஒப்பந்தத்தை பதிவு செய்யவில்லை என்று சொன்னால் நான் பதிவு செய்ய அழைத்தேன் பிரதிவாதிகள் வரவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் நாங்கள் போட்ட ஒப்பந்தம் என்றால் சரிதான். தொகை பெரிதாக இருப்பதால் பதிவு செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். மேற்படி ஆவணத்தை பதிவு செய்ய பிரதிவாதிகள் முன் வராத போது மேலும் நான் எதற்காக ரூபாய் 70 லட்சம் கொடுத்தேன் என்று சொன்னால் வங்கியில் கட்ட வேண்டும் என்று பிரதிவாதிகள் கேட்டதால் கொடுத்தேன்.

4. என்னுடைய அறிவிப்பிலோ தாவாவிலோ பணத்தை எங்கு வைத்து கொடுத்தேன் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். வங்கிகளில் கடன் பெறுவதாக இருந்தால் சட்டக் கருத்துறை பெற்ற பிறகுதான் கடன் தருவார்கள் என்றாலும் நான் அதை பார்த்துவிட்டு தான் வா.சா.ஆ.1 ஆவணம் ஒப்பந்தத்தை ஏற்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. தாவாச் சொத்துகளைப் பொறுத்து வங்கி வில்லங்கங்களை தவிர வேறு வில்லங்கங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல உள்ளது. மேற்படி வில்லங்கங்கள் இருப்பது தெரிந்து தான் ஒப்பந்தத்தை ஏற்படுத்தினேன் என்று சொன்னால்

மேற்படி வில்லங்கங்கள் சரி  செய்வதாக பிரதிவாதிகள் சொன்னார்கள்.

5. வங்கிகள் வில்லங்கங்களை தவிர வேறு வில்லங்கங்கள் இருப்பதாக வா.சா.ஆ.1 ஒப்பந்தத்திலோ அல்லது அறிவிப்பிலோ குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் அதன் பிறகு தான் எனக்கு தெரிந்தது.  தாவாவில் அவ்வாறு குறிப்பிடவில்லை என்று சொன்னால் அது எனக்கு நினைவில்லை. பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து வங்கி கடன் இருப்பதை என்னிடம் மறைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல மறைத்துவிட்டார்கள் வேறு கடன் இருந்ததையும் மறைத்து விட்டார்கள். மேற்படி  சங்கதியை நான் அறிவிப்பில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன்.

6. நான் வழங்கிய அறிவிப்புக்கு பிரதிவாதிகள் கொடுத்த பதில் அறிவிப்பைப் பொருத்து நான் எந்த மறுப்பு அறிவிப்பும் அளிக்கவில்லை என்று சொன்னால் எனக்கு நினைவில்லை.  பிரதிவாதிகள் அனைத்து விவரங்களையும் விளக்கி பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள் என்றாலும் அதனால் தான் அதை மறுத்து நான் எந்த அறிவிப்பும் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.  நான் ஒப்பந்தம் போடும்போது கடனை எல்லாம் என்னுடைய செல்வாக்கை வைத்து அடைத்து தருவதாக சொல்லித்தான் வா.சா.ஆ–1 ஒப்பந்தத்தை பெயரளவில் ஏற்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல.

7. 05.7.2019 தேதியிட்ட ஒப்பந்தத்துடன் ஒரு மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டு இணைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான் அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளிடம் வங்கி கடன் பிரச்சினைகளை சரி செய்து தருவதாக குறிப்பிட்டு முத்திரைத்தாள், பச்சைக் காகிதம் ஆகியவற்றில் கையொப்பம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை சமன்படுத்துவதற்கு எந்த விதமான அதிகாரத்தையும் பிரதிவாதிகள் எனக்கு தரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8. தாவா சொத்துக்களை நான் சமன் செய்ததாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் கிரையம் செய்வதற்கு போதிய பணம் இல்லாதால்தான் என்னால் தாவா சொத்துக்களை கிரையம் செய்ய இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. 6 மாத காலத்துக்குள் வங்கி கடனை அடைக்க வேண்டும் என்றும் மேற்படி கடன் தொகை நான் தொகை கொடுத்தால் தான் அடைக்க முடியும் என்று பிரதிவாதிகள் என்னிடம் சொன்னார்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் என்னுடைய கடமையை நான் ஆற்ற தவறி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த ஒப்பந்தத்திற்கு காலம் மிக முக்கியமானது என்று சொன்னால் சரியல்ல.

9. தாவா சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகளுக்கு வில்லங்கமற்ற தலை உரிமை உள்ளது என்றாலும் அதற்கு சட்டக் கருத்துறை பெற வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகளின் உதவியை தெரிந்து கொண்டுதான் அவர்களுக்கு ரூபாய் ஒரு கோடியே 70 லட்சம் ரூபாயை கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 பிரதிவாதிகள் மீத கிரையத் தொகையை பெற்றுக்கொண்டு கிரையத்தை முடிக்க முன்வர விட்டால் வாதி நீதிமன்றத்தை அனுகி கிரையத்தை முடித்துக் கொள்ளலாம் என்றோ அல்லது நான் மீத தொகையை செலுத்த தவறினால் முன்பன தொகையை இழந்து விட வேண்டியது என்றோ சரத்துக்கள் காணப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

10. என்னால் மீத பணத்தை செலுத்த இயலவில்லை என்று நான் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் எனக்கு மீதப் பணத்தை கொடுக்க வசதி இருந்தது. மீதத்தொகை செலுத்துவதற்கு எனக்கு வசதி இருந்தால் அதை நீதிமன்றத்தில் நான் செலுத்தி இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. மீத தொகையை இதனால் வரையில் நான் நீதிமன்றத்தில் செலுத்தவில்லை என்று சொன்னால் செலுத்தவில்லை உத்தரவிட்டால் கட்ட தயாராக இருக்கிறேன். மீதத்தொகை செலுத்துவதற்காக மனு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது போன்று நினைவில்லை.

**11.** நான் ஒப்பந்தத்தில் கண்டவாறு என்னுடைய பங்கை ஆற்ற தவறியதால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முன்பனத் தொகையை நான் திரும்ப பெற இயலாது என்று சொன்னால் சரியல்ல. தற்போதும் பிரதிவாதிகள் என்னை ஏமாற்றவோ அல்லது மோசடியும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் நான் கோரியுள்ள மாற்றுப் பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.06.23 18:49:51 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.